விலை: சதம் 75 ★★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 புரட்டாதி 18 ஜுல்ஹஜ் 5 இதழ் 232
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 4-10-1981

உங்களுக்கு தேவையான
தரமான
கட்டிடப் பொருட்கள்,
குளியல் அறை,
மலசலகூட இணைப்புகள்
முதலியன நியாயமான விலைகளில்
பெற்றுக்கொள்ள
விஜயம் செய்யுங்கள்
சமுத்ரா ரேட்ஸ்
லிமிட்டெட்
23 2, ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 7236 [1108]

சனிற்ரறி வெயார்
[SANITARY WARE]
இறக்குமதி செய்த
கொமேட் (Commode)
சிஸ்ரேண் மூடியுடன்
ரூபா 975/- ல் இருந்து
வாஷ்பேஷின்கள்
இணைப்புகளுடன் ரூபா 475/-ல்
இருந்து
மாபிள்கள் P.V.C. பைப்புகள்
மற்றும் இணைப்புகளும்
கிடைக்கும்.
சமுத்ரா ரேட்ஸ்லிமிட்
23/2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்; 7236 [1139]

★ பாராளுமன்ற பகிஷ்கரிப்பு

★ அரசு - கூட்டணி பேச்சுவார்த்தை

# கூட்டணி இன்று தீர்மானிக்கும்

[நமது நிருபர்]

தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய செயற்குழு இன்று காலை எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் கொழும்பு வாசஸ் தலத்தில் கூடுகிறது.

இதேவேளை அரசு—கூட்டணி உயர்மட்டக் குழு நாளை மாலை ஜனாதிபதி மாளிகையில் இரண்டாவது தடவையாகக் கூடவிருக்கிறது.

பாராளுமன்றம் நாளைமறுதினம் கூடுகிறது.

இந்நிலைமைகளில் முக்கியமான சில அரசியல்முடிவுகள் இன்றைய தமிழர்விடுதலைக்கூட்டணி மத்தியசெயற்குழு கூட்டத்தில் எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழர்விடுதலைக் கூட்டணி மேற்கொண்டுள்ள பாராளுமன்றபகிஷ்கரிப்புதொடர்பாகவும், அரசுடனானகூட்டணியின் உயர்மட்ட பேச்சுவார்த்தை குறித்தும் மக்கள் மத்தியிலும் கட்சிக்குள்ளும் கருத்துவேறுபாடுகள் நிலவுகின்றன. இவை இரண்டும் மீதான முடிவுகள் குறித்தேஇன்றைய கூட்டத்தில், முக்கியமாக எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மே—யூன் வன்முறைச்சம்பவங்கள் தொடர்பாக அரசுக்கு 5 கோரிக்கைகளை விடுத்து கூட்டணி பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்துவருகிறது. பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள அதே வேளை அரசுக்கும் கூட்டணிக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளையடுத்து இருதரப்பிலுமான உயர்மட்டக்குழு ஒன்று இப் பிரச்னைகள் குறித்தும். மாவட்ட அபிவிருத்திசபை குறித்தும் அவ்வப்போது கூடி ஆராய முடிவாகியது. அப்படி அமைக்கப்பட்ட குழுவே இரண்டாவது தடவையாக நாளை சந்திக்கிறது.

பாராளுமன்றப் பகிஷ்கரிப்புக்கு கூட்டணி முன்வைத்த 5 கோரிக்கைகளில் சர்வதேச விசாரணைக்கமிஷன் தவிர்ந்த ஏனைய 4 கோரிக்கைகளையும் அரசு கொள்கை அளவில் ஒப்

[6-ம் பக்கம் பார்க்க]

## நெடுமாறன் கொழும்பு திரும்பினார்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சித் தலைவரும் தமிழக சட்டசபை உறுப்பினருமான திரு. பி. நெடுமாறன் நேற்று ரயில் மார்க்கமாக கொழும்பு திரும்பினார்.

யாழ். ரயில் நிலையத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், கூட்டணி செயலாளர் நாயகமும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம், யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் மற்றும் பல பிரமுகர்கள் வழியனுப்பிவைத்தனர்.

இரண்டு தினங்களில் திரு. பி. நெடுமாறன் தாயகம்திரும்புவார்.

## சாவகச்சேரி இளம் பெண் சிங்கப்பூரில் தற்கொலை!

### சடலம் இங்கு வந்து சேர்ந்தது

[சாவகச்சேரி]

சிங்கப்பூரில் பணிபுரிந்த சாவகச்சேரியைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் தற்கொலை செய்ததை அடுத்து அவரது சடலம் விமான மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்டு சாவகச்சேரிவந்து சேர்ந்தது.

சாவகச்சேரி மரணவிசாரணை அதிகாரி திரு.என்.தர்மேந்திரன் நடத்திய மரணவிசாரணையின்போது சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் த நவரத்தினராசா, மேற்படி சடலம் தமது சகோதரி தனையசிங்கம் இரத்தினேஸ்வரியினுடையது என அடையாளம் காட்டினார்.

இதுபற்றிய விபரம் வருமாறு!

சிங்கப்பூரில் வீட்டுப்பணிப் பெண்ணுகக் கடமையாற்றிய இந்த யுவதி தனக்கேற்ற சரியான உத்தியோகம் கிடைக்கவில்லையே என்று விரக்தியுற்றுக் கிருமிநாசினி அருந்தி மிகவும் ஆபத்தான நிலையில் சிங்கப்பூர் பெரியாஸ்பத்திரியில் உயிருக்குப் போராடியதாகவும் கடந்த 28ம் திகதி அவர் அங்கு இறந்ததாகவும் சிங்கப்பூரில் நடந்த மரண விசாரணையில் கிருமிநாசினி அருந்தி அவர் தற்கொலை செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டகுறிப்போடு அவரது சடலம் இங்கு அனுப்பப்பட்டது.

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. எஸ். கே. மயில்வாகனம், கிராமசேவகர். கே. பேரம்பலம் ஆகியோர் முன்னிலையில் சாவகச்சேரி மரண விசாரணை அதிகாரி திரு. தர்மேந்திரன் விசாரணை நடத்தி ரி. நவரத்தினராசா, இரத்தினம் பொன்னுத்துரை ஆகியோரின் சாட்சியங்களை விசாரணைசெய்தபின் சிங்கப்பூர் மரண விசாரணை அதிகாரியின் தீர்ப்பை ஊர்ஜிதம் செய்து தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

சரியானமுறையில் ஆங்கிலம் எழுத வாசிக்கப்பேசத் தெரியாமல் வெளிநாட்டிற்கு உத்தி

6-ம் பக்கம் பார்க்க]

## பதிவுசெய்யாத வள்ளம் மீன்பிடிப்பதற்குத் தடை

(சுண்டிக்குளி)

இலங்கையின் கடற்பிராந்தியத்தில் பதிவுச்சான்றிதழ் இல்லாத சகலமீன்பிடி வள்ளங்களையும் கண்டு பிடித்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு நாட்டின் சகலமீன்பிடி கூட்டுத்தாபன அதிபர்களுக்கும்மீன்பிடி அமைச்சுபணித்துள்ளது.

இலங்கைத்தீவின் கடற்பிராந்தியங்களில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் இதுவரை பதிவுச்சான்றிதழ் பெற்றுக்கொள்ளாத மீன்பிடி வள்ளங்களுக்கு அக்டோபர் 15ம் திகதி வரை மீன்பிடி அமைச்சு அவகாசம் கொடுத்துள்ளது.

மீன்பிடி கூட்டுத்தாபனங்களில் பதிவுசெய்யாமல் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் மீன்பிடி வள்ளங்கள் தீவின் பல பகுதிகளிலும் ஆயிரக்கணக்கில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் இதனுல் அவற்றின் தேவைகளையும் நலன்களையும் கவனிக்க முடியாது இருப்பதாகவும் மீன்பிடி வள்ளங்களின் சிறிய, பெரிய வர்க்கங்களையும் அவற்றின் தொகைகளையும் மீன்பிடி இலாகா அதிகாரிகளினுல் சரியான புள்ளிவிபரங்களைக் கணித்துக்கொள்ள முடியாது இருப்பதாகவும் அமைச்சின் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

அக்டோபர் 15ம் திகதிக்குப் பின்னர் பதிவுச்சான்றிதழ் இல்லாமல் எவராவது இலங்கை கடற்பகுதியில் மீன் பிடிப்பதற்கு எவ்வகையானகலங்களையும் பாவிக்கவோ இயங்கவோ அனுமதிக்கப் படமாட்டார்கள்.

## புதுமாதிரி மோசடி!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பலமாதிரியும் ஏமாற்றிப் பணம் பறிக்கும் கோஷ்டியொன்று நடமாடுவதாகத் தெரிகிறது. இவர்கள் மீது மிகவும் கவனமாக இருக்குமாறு பொலிசார் கேட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளையொன்றில் நகை அடைவுவைத்துப் பணம் எடுத்துச்சென்ற ஒரு பெண் ஏமாற்றப்பட்டு, தனது பணத்தை இழந்து வெறுங்கையுடன் வீடு திரும்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இம் மோசடி இரண்டாவது தடவையாக நடைபெற்றுள்ளது.

நல்லூரைச் சேர்ந்த சுந்தசாமி ராஜேஸ்வரி என்பவர், யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் வங்கி கிளையொன்றில் ஒன்றேகால் பவுண் தங்கச்சங்கிலியை அடகுவைத்து 1250 ரூபா எடுத்துக்கொண்டபோது ஒருவர் இடைமறித்து ''உங்கள் கணக்கில் ஏதோ பிழையாயிருப்பதாக, வங்கி மனேஜர் காசை வாங்கிவரச் சொல்கிருர்'' என்று வங்கி ஊழியர் மாதிரி நடித்து சாதுரியமாக பணத்தை வாங்கிக்கொண்டு தலைமறைவாகிவிட்டாராம்!

அப்பாவிப் பெண் குறிப்பிட்ட வங்கி மனேஜரிடம் சென்று இது பற்றிக் கேட்டபோது மோசடி அம்பலமானதாகச் சொல்லப்படுகிறது.

[மா]

## தணிக்கை

பொதுசன பாது காப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினுல் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை இப்பொழுது அமுலில் உள்ளது.

## சுவாமி சச்சிதானந்தா இன்று யாழ். வருகிருர்

[யாழ்ப்பாணம்.]

யோகிராஜ்ஸ்ரீசச்சிதானந்தா சுவாமி தமது அமெரிக்க சீடர்களுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இன்று மாலை 6-45 மணிக்கு பலாலி விமான நிலையத்தை வந்தடையும் இவர்களுக்கு இரவு 7-15 மணிக்கு யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் வரவேற்பளிக்கப்படும். இங்கு அன்றிரவு வைத்திய கலாநிதி கெங்காதரனின் புல்லாங்குழல் இசையும், விசேட நவராத்திரி பூஜையும், அதைத் தொடர்ந்த யோகிராஜ் ஸ்ரீ சச்சிதானந்தா சுவாமிகளின் அருளுரைகளும் இடம்பெறவுள்ளது.

நாளை காலை 10 மணிக்கு வைமன் வீதியிலுள்ள 'அருளகம்' இல்லத்தில் சிவானந்த மகளிர் சங்கமும், சச்சிதானந்த சங்கமும் இணைந்து வழங்கும் விசேட பிரார்த்தனை நடைபெறவுள்ளது.

அன்று மாலை 5 மணிக்கு உடுவில் சச்சிதானந்தா சிறுவர் மண்டபத்தில் நடைபெறவுள்ள ஆண்டு விழாவில் யோகிராஜ் ஸ்ரீ சச்சிதானந்தா சுவாமிகளுக்கு வரவேற்பளிக்கப்படும்.

## "மீண்டும் வேலை இல்லையேல் ஓய்வூதியம்"

[யாழ்ப்பாணம்]

வேலை நிறுத்தத்திலீடுபட்ட. 55வயதுக்கு மேற்பட்ட 7பேர், மாவட்ட சபைத் தலைவரைச் சந்தித்த, மகஜர் ஒன்று கையளித்துள்ளனர்.

இவர்கள் தங்கள் மகஜரில் ''வேலை வழங்கவேண்டும் அல்லது ஓய்வூதியம் வழங்கவேண்டும்'' என்று கோரியுள்ளார்கள்.

[மா]

# நாட்டின் அபிவிருத்தியிலும் மாணவர் ஈடுபட வேண்டும்

## யாழ். அரச அதிபர் கூறுகிறார்

(மானிப்பாய்)

கல்வியில் மட்டும் ஈடுபாடு கொள்வதால் மாணவர்கள் முழுமையானவர்களாக மாற முடியாது. ஏனைய துறைகளிலும் அவர்களது ஆர்வம் பெருக வேண்டும். நாட்டின் வளர்ச்சி அபிவிருத்தி என்பவற்றிலும் மாணவர்களுக்கு ஈடுபாடு இருக்கவேண்டும். அதன்மூலம் தான் நல்லதோர் சமுதாயத்தை எதிர்காலத்தில் உருவாக்க முடியும்".

இவ்வாறு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பரிசளிப்பு விழா கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு. க. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற போது பிரதம அதிதியாக கலந்துகொண்ட யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

"மாணவர்கள் சமுதாயத்திலிருந்து விடுபட்ட மனோநிலையில் வாழ முற்படுவது கூடாது. இளவயதிலிருந்தே அவர்களுக்கு பொறுப்புணர்ச்சி வளர வேண்டும். சிறு கைத்தொழில் போன்ற துறைகளில் ஈடுபட்டு தமது குடும்ப நிலைமையை உயர்த்துவதுடன் நாட்டின் வளர்ச்சிக்கும் மாணவர்கள் முன்வரவேண்டும்.

அதிபர் திரு. க. பாலசுந்தரம் தமது தலைமையுரையில் கூறியதாவது:

"நமது பாரம்பரிய கல்விச் செல்வம் பல தாக்கங்களின் காரணமாக இக்கட்டான நிலையிலேயே வளர்ந்து வருகிறது. இந்நிலையை நிவர்த்தி செய்து எமது கல்விச் செல்வத்தைப் பேண வேண்டியது நமது கடமையாகும்.

உயர்வகுப்பு, கல்விஞான ஆசிரியர்கள் போதாமை, மாணவர்களது பிரத்தியேக ரியூசன் கல்வி முறையால் அவர்கள் ஏனைய துறைகளில் நாட்டம் கொள்ளமுடியாமை பரீட்சைகளின் பெறுபேறுகள் சிலவேளைகளில் தாமதப்படுவதால் மாணவர்கள் அக்காலப் பகுதியில் கட்டுப்பாடு, ஒழுக்கம் ஆகியவற்றிலிருந்து விடுபடுதல் போன்ற பிரச்சினைகளுக்கு நாம் தீர்வு காணுதல் அவசியமாகும். கல்வியைப் பாதிக்கும் இப்பிரச்சினைகளை மாணவர்கள் பெற்றோர்கள், கல்விப்பகுதியினர் யாவரும் உணர்ந்து இவற்றைத் தீர்க்கமுயலவேண்டும். (ஞ)

## யாழ் கோஷ்டி வெற்றி

[அரியாலை]

விளையாட்டுத் துறை அமைச்சினால் மாவட்டங்களுக்கிடையே நடாத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டியில் மன்னார் கோஷ்டியும், யாழ்ப்பாணக் கோஷ்டியும் கலந்துகொண்ட போட்டி யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது யாழ்ப்பாணக்கோஷ்டி 3-1 கோல் களால் வெற்றியீட்டியது [க]

## குழாய்க் கிணறு

(புளியங்குளம்)

துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கருநேரிக்குளம் பகுதியிலுள்ள மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு றெட்பானா ஸ்தாபனம் புதிய குழாய்க் கிணறுகளை அமைக்கவுள்ளது. இதற்கான அனுமதியை முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர் வழங்கியுள்ளார்.

## புதுவருட உத்தியோகத்தர்

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு பி. எம். ஆரியபால (மட்டக்களப்பு சிங்கள மகாவித்தியாலயம்) பொதுச் செயலாளர் திரு எச். என். பெர்னாண்டோ, பொருளாளர் திரு ஈ. அமரசேன டி. சில்வா. (ஞ)

---


## தேவை பழைய ரயர் சேகரிப்பாளர்கள்

கார், லொறி, டிராக்டர்களின் பழைய பாவனைக்கு உதவாத ரயர்கள் சேகரிப்பவர்கள், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவை. ஒவ்வொரு மாவட்டத்திலும் சேகரிக்கப்படும் ரயர்களை காலத்திற்கு காலம் லொறிகள் வந்து எடுத்துச்செல்லும். சேகரிப்பாளர்களுக்கு பொருட்களின் பெறுமதி மீளக் கொடுக்கப்படுவதுடன் தகுந்த கமிஷனும் வழங்கப்படும். விபரங்களையும். அனுபவத்தையும் குறிப்பிட்டு உடன் விண்ணப்பிக்கவும்

த. பெ. எண்: 1449 — கொழும்பு [1141]

---

கற்குழிப் பகுதியிலிருந்து கல்நொருக்கிப் பகுதிக்கு சுண்ணாம்புக் கற்களை ஏற்றிப் பறிப்பதற்கான

## பார வாகனங்கள்

மேற்குறிப்பிட்ட சேவைக்கு எங்கள் தொழிற்சாலையில் கொள்ளளவு 3 கனத்துக்கு குறையாத டிப்பிங் ஏற்பாடுகள் உள்ள பார வாகனங்கள் தேவைப்படுகின்றன. கொடுப்பனவு மெட்ரிக் தொன் அடிப்படையில் கணிக்கப்படும். ஒரு மெட்ரிக்தொன் அளவுக்கான உங்கள் விலைகோரல் பத்திரங்களை கொள்ளளவு கனவளவிலும், உங்களிடம் தற்சமயம் இருக்கும்வாகனங்களின் தொகை ஆகியவற்றையும் குறித்து 1981-10-08-ம் திகதியன்று பி. ப. 2-30க்கு அல்லது அதற்கு முன்பதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தொழிற்சாலை முகாமையாளர்,

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.

1981-09-30 1122

---

# ICMA

MAY 1982

மேற்படி பிரிவு A பரீட்சைக்கான போதனா வகுப்புகள் 25-10-1981ல் ஆரம்பமாகின்றன.

விபரங்கட்கு:

அதிபர்,
**Percivall Hall**
சப்பல் வீதி
யாழ்ப்பாணம்.

1134

---

தரத்தில் சிறந்தது என எல்லோராலும் பாராட்டப்படும் பொருட்களுக்கு

## நியுரோன் எலெக்றிக்கல்ஸ்

எப்பொழுதுமே நம்பிக்கைக்கு உகந்தது

- செல்றிக் பல்புகள்
- ஜெம் மோட்டர்கள்
- லூப் உபகரணங்கள்
- லுயின் ஜெனரேட்டர்கள்
- லுயின் நீரிறைக்கும் யந்திரங்கள்

இவற்றுக்கு நாமே பிரதம ஏஜெண்டுகள்.

- சி. பி. ஈ. பல்புகள்
- எவரெடி பற்றிகள்
- எஸ்-லோன் பைப்புகள்
- மலசல குளியலறை உபகரணங்கள்
- மின் உபகரணங்கள்
- மின் விசிறிகள்

வர்த்தகர்களின் நலன் கருதி, எமது எஸ்-லோன் பைப் டிப்போ யாழ்ப்பாணம் 440, ஆஸ்பத்திரிவீதியில் திறக்கப்பட்டுள்ளது.

சுமையின்றி சுதந்திரமாக பொருட்களை வாங்குவதற்கு

# நியுரோன் எலெக்றிக்கல்ஸ்

141-143, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். போன்: 7016

---

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கல்வியங்காட்டில் ஆறு பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்குண்டு இரண்டு, மூன்று பரப்புத் துண்டுகளாகவும், வாங்கலாம் விபரங்களுக்கு: 92 பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம். 1123

இரு உயர்ரக பெல்ஜியநாட்டு வர்ணக் கம்பளங்கள் (ஒவ்வொன்றும் நீளம் 10' 8", அகலம் 8' 4") விற்பனைக்குண்டு Hotelகளுக்கு நிலவிரிப்பாக உபயோகிக்க உகந்தது. தொடர்பு கொள்க: விளம்பர இல: 1128, C/o, ஈழநாடு யாழ்ப்பாணம். 1128

### தேவை

பற்பொடி, சீயக்காய்பவுடர் மற்றும் தேவஸ் தயாரிப்புகள் தயார் செய்வதற்கு பெண்கள்தேவை. கிறைண்டிங்வேலை தெரிந்த ஆண்கள் தேவை உடனே தொடர்பு கொள்ளவும். தேவாஸ் கிறைண்டிங் மில், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 1124

தொப்பி லேஞ்சிகள் தைப்பதற்கு தையல் வேலை தெரிந்த பெண்கள் தேவை நேரில் வரவும், R. G. இன்டஸ்றீஸ், 32, பிறவுண் வீதி. யாழ்ப்பாணம். [1138]

### விற்பனைக்கு

கொடிகாமம் பருத்தித்துறை பிரதான வீதிக்கு அருகில் சுட்டிபுரம் அம்மன் கோவிலுக்கு சமீபத்தில் 70 பரப்பு காணி. 150 பனை, 250தென்னை ஆகியவற்றுடனும் விற்பனைக்குண்டு முற்பக்கம் தெற்கெல்லைக்கும் உகந்தது. தொடர்பு கொள்க: லிவா ஹாட்வெயர்ஸ் கைதடிச் சந்தி. 1132

சகல உபகரணங்களுடன் இரண்டு அச்சு இயந்திரங்கள் தமிழ், ஆங்கில, சிங்கள எழுத்துக்களுடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு 320, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [1137]

நல்லூர் குறுக்கு வீதி வாழ்நாளானதில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு 5-10-81 தொடக்கம் 8-10-81 வரை மு. அரியரத்தினம், 10, ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்க. 1126

வண்ணார்பண்ணை, ஐயனார் கோவிலுக்கு அருகாமையில் 1¾ பரப்பு காணி, கிணற்றுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: தி.இரத்தினசாமி, 25, சிவகுருநாதர் வீதி,நீராவியடி, யாழ்ப்பாணம் 1131

யாழ் - பருத்தித்துறை வீதி 8-ம் கட்டை சிறுப்பிட்டியில் பாடசாலைக்கு அருகாமையில் 3½ பரப்புக் காணியும் அருகாமையில் அம்பலத்தனை 10 பரப்பு வயல் காணியும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: வ. இளையா, மே/பா K பாக்கியம் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. 1136

கொடுப்பிட்டி மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு அருகாமையில் நாலு பரப்புக் காணி தண்ணீர், சகல வசதிகளுடனும் விற்பனைக்குண்டு. உரிமையாளர் வெளிநாடு செல்ல இருப்பதால் ஓர் அரிய சந்தர்ப்பம், நேரில் வரவும். விலை: 24 000/- ராஜேந்திரன் C/o, S கோபால், மெயின் றோட், பொலிகண்டி ஆலடி, வல்வெட்டித்துறை. 1130

யாழ்ப்பாணம், டைலஸ் வீதி, இலக்கம் 139 (507) கொண்ட வீடு, வளவும் 4 பரப்புக் காணியுடன் காலியான நிலையில் விற்பனைக்கு உண்டு தொடர்புகொள்ளவும் இ. அம்பலவாணர், 248, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1110

ஆனைக்கோட்டை குளப்பிட்டி ஆனைக்கோட்டை தெருவில் ஆனைக்கோட்டை சந்தியில் இருந்து 100 யாருக்குள் பதினொரு (11) பரப்பு வீடு கட்டுவதற்கு உகந்த காணி. தெருவிற்கு வடக்குப்பக்கமாக இரு துண்டுகளாகவும் கொடுக்கப்படும். பொன்னுத்துரை பூபேந்திரராஜன், C/o சின்னத்தம்பி. உணம்ஸ் மோட்டார்ஸ். ஆனைக்கோட்டைசந்தி பழைய டச் தெரு, ஆனைக்கோட்டை. 1094


## கேள்வி அறிவித்தல்

பெருந்தெருக்கள் திணைக்களம்
யாழ்ப்பாணம்

பனை நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவுவரணி - இயக்கால் - விராவில்ரூம் முதலாம் மைலடியில் திருத்த வேலைகள் செய்வதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. ரூபா 50,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 50/- செலுத்தி யாழ்ப்பாணம், (பெருந் தெருக்கள்) பிரதம பொறியியலாளரிடம் 08-10-81ந் திகதி வரை விண்ணப்பப் படிவங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

எஸ். கணேசரத்தினம்
பிரதம பொறியியலாளர்
(பெருந்தெருக்கள்)
யாழ்ப்பாணம்.

761, பீச்றோட்,
யாழ்ப்பாணம். 1133

---

சங்கானை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## கேள்வி விற்பனை

மேற்காட்டிய சங்கமினது ஆலைக்கு நூல் சுற்றிவந்த அலுமினியக் கோன்கள் 1135 கிலோக்கள் கேள்வி மூலம் விற்பனைக்குள்ளன. இவற்றை மொத்தமாக கொள்வனவு செய்யவிரும்புவோர் தபால் உறையின் மேல் பக்க இடது மூலையில் "கோன்ஸ் கேள்வி" என எழுதி விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் "பொது முகாமையாளர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை" என்றவிலாசத்திற்கு 19-10-81க்குப் பிந்தாமல் அனுப்பிவைத்தல் வேண்டும்.

பொருட்களை நேரில் பார்க்க விரும்புவோர் சங்க அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்

30-09-1981 1118

---

## கிறீன்பீல்ட் வெற்றி

[அரியாலை]

யாழ் கிறீன்பீல்ட் விளையாட்டுக்கழகத்திற்கும், யாழ் பரியோவான் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் கிறீன்பீல்ட் விளையாட்டுக்கழகம் 5-0 கோல்களால் வெற்றியீட்டியது பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டிக்கு திரு [illegible] என் தலைமை மத்தியஸ்தம் வகித்தார்

# 'உத்தேச கல்விச்சீர்திருத்தங்கள் 'சமூக பொருளாதார தேவைகளை கருத்திற்கொள்ளவில்லை''

—கல்விக்கருத்தரங்கில் நேசையா

";கல்வி, சமூக நோக்கில் சமூகத்திற்காக அமையவேண்டும். வலது குறைந்தோர் ஆண்டாக இவ்வாண்டை நாம் கொண்டாடும்போது கூட இலங்கையில் உள்ள பத்து வீதமான வலது குறைந்த மாணவர்கள் பற்றி ஒரு சொல்லுங்கூட வெள்ளை அறிக்கையில் குறிப்பிடவில்லை''

கல்வி வெள்ளை அறிக்கை பற்றிய கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த இளைப்பாறிய பல்கலைக்கழக சிரேட்ட விரிவுரையாளர் இவ்வாறு தமது தொடக்கவுரையில் குறிப்பிட்டார்.

சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு சீ. ஈ. ஆனந்தராஜனின் பெருமுயற்சியால் கூட்டப்பட்ட இக்கருத்தரங்கு சென்ஜோன்ஸ் கல்லூரி நூலக மண்டபத்தில் நடைபெற்றது. கல்லூரி அதிபர்கள், உப அதிபர்கள், பாடசாலை முகாமையாளர்கள், ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர்கள் கல்வித்திணைக்கள அங்கத்தவர்கள் முதலானோர் இக்கருத்தரங்கில் பங்குபற்றினர்.

வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள "பாடசாலை தொகுப்பு முறை'' கருத்து வேறுபாட்டுக்கு இடமளித்தது.

இது வரவேற்கக்கூடியதென்றும் இது சேர்ந்து பட்டதாக அமையவேண்டுமென்பதும் திரு. நேசையாவின் கருத்தாகும்.

பாடசாலை தொகுப்பு முறையும் அதன் அதிபர் நிர்வாக முறையும் நடைமுறைக்கு ஏற்றதா என்ற கேள்வி எழுந்தது.

முன்னை நாள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் திரு. ஐ. பி. துரைரத்தினம் கருத்துத் தெரிவிக்கையில், அதிபருக்கு கூடுதலான பொறுப்புகள் சுமத்தப்பட்டிருப்பதாக வெள்ளையறிக்கை கூறுகிறதென்றார். உள்ளூர் கல்விபிரதேசங்களாக வகுக்கப்பட்டு அதற்குத் தலைவராக சுப்பிரின்ரேன்டன்ற் ஒருவரை நியமிப்பது பாடசாலை தொகுப்பு முறை செயற்பட உதவியாக இருக்கும் என்றார்.

ஒரு பாடசாலையின் நூல்நிலையம், ஆய்வுகூடம், விளையாட்டு மைதானம் ஆகியவற்றை மற்றைய பாடசாலைகள் பயன்படுத்துவது என்பது நடைமுறையில் சாத்தியமற்றதென்று சென்.பற்றிக்ஸ் கல்லூரி முதல்வர் வண. பிரான்சிஸ் ஜோசேப் குறிப்பிட்டார்.

ஆரம்ப பாடசாலைக் கல்வி ஆண்டு ஆறிலிருந்து ஐந்தாகக் குறைப்பது, சிரேட்ட இடைநிலைக் கல்வியாண்டை ஒரு வருடம் கூட்டுவது பன்னிரண்டாம், பதின்மூன்றும் வகுப்புக்குரிய மாணவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவது - இவ் விடயங்கள் ஆக்கபூர்வமானவையென்று கொள்ளப்பட்டன.

எமது எதிர்காலம் விவசாயத்திலே தங்கியிருப்பதால் கூடியளவு முக்கியத்துவம் அதற்கு அளிப்பதோடு 11ம் வகுப்பு முடிவில் நடைபெறும் பரீட்சையில் விஞ்ஞானமும் சமூகக் கல்வியும் பிரதேச மாவட்ட அடிப்படையில் பரீட்சிக்கப்படவேண்டுமென்பது திரு நேசையாவின் ஆலோசனையாகும்

கடந்த பல கமிஷன்கள் சிபாரிசு செய்த சீர்திருத்தங்கள் காற்றில் பறக்கவிட்ட தன்பயனாக இன்றைய இளைஞர்கள் புரட்சி மனப்பான்மை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். இது ஒரு ஆக்கபூர்வமான புரட்சி மனப்போக்கல்ல. இவர்களின் சவாலை உத்தேச சீர்திருத்தங்கள் நிறைவேற்றும் தன்மையுடையனவா? என்ற கேள்வியை முன்னைநாள் யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. ஈ. சபாலிங்கம் எழுப்பினார். பாடசாலை தொகுப்புமுறை பாடசாலைகளின் தனித்துவத்தை மறைத்துவிடும் என்ற கருத்தையும் அவர் தெரிவித்தார்.

சீர்திருத்தங்கள் தொழிற்படுவதற்கு அவசியமானது ஆசிரியரின் பொறுப்புணர்வு. இன்று பாடசாலைகள் நீண்டகாலமாகத் தற்காலிக அதிபர்களால் நிர்வகிக்கப்படுகின்றன என்பதை திரு. சபாலிங்கம் சுட்டிக் காட்டினார்.

ஆசிரியர்களின் வாழ்க்கை நிலை, இன்று அவர்கள் தம் பொறுப்பான சேவைக்கு அர்ப்பணிக்கமுடியாத நிர்ப்பந்தத்தை தெளிவாகக்காட்டுகின்றது. தங்கள் வருமானத்தை அதிகரிக்க வேறுவகைகளை நாடவேண்டிய பரிதாபகரமான நிலை அவர்களின் நிலையென்று சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. ஜீ. ஈ. எஸ் செல்லையா திடமாகத் தெரிவித்தார்.

இதனை ஆதரித்துப் பேசிய திரு. சீ. ஈ. ஆனந்தராஜன் சம்பள உயர்வு, அதனை ஊக்குவிக்கும் கருத்துக்கள் எதுவும் அறிக்கையில் காணப்படவில்லையென்றும் தெரிவித்தார். பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவில் பாடசாலைகளுக்கு கூடிய பங்கு அளிக்கப்படவேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

பாடசாலைகளுக்கிடையே போட்டி நிலவாதபோதும் தனியார் கல்வி நிறுவனங்கள் போட்டியை வளர்ப்பதாகக் கருதிய சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. ஜி. பரராஜசிங்கம் நிரந்தரமாக ஒவ்வொரு பாடசாலைத் தொகுப்புக்கும் ஒரு ஆசிரிய ஆலோசகர் நியமிக்கப்படவேண்டுமென்றார்.

பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் ஆசிரியர்கள் என்றும் தங்கள் தகைமைகளை அதிகரிக்க ஆவலாயிருக்க வேண்டுமென்றும்; அதற்கு வேண்டிய ஊக்குவிப்புகள் அளிக்கப்படவேண்டுமென்றும். சிறப்புப் பதவிகள் அத்தகைய ஆசிரியர்களுக்கே கூடுதலாகவழங்கப்படவேண்டுமென்றார்.

மாவட்ட அபிவிருத்தி சபைகள் விசேட அதிகாரங்கள் கொண்டிருத்தலால், ஒவ்வொரு பிரதேசத்திலும், தகுந்த விவசாயம், மீன்பிடித் தொழில், போன்ற திறமைகளில் விசேட பயிற்சிகள் ஏற்படுத்தல் நலம் என்று பரியோவான் கல்லூரி முகாமையாளர் வண. ஹோசிங் [illegible] முடிவுரையாகச் சமர்ப்பித்தார்.

மேலெழுந்தவாரியாக அமைந்த இந்தக் கருத்தரங்கு, சிந்தனைக்குரிய பல வினாக்களை எழுப்பியிருக்கின்றதென்றும் விரைவில் இதுபற்றி விரைவாக ஆராய தொடர்பான சட்டங்கள் நடைபெறுமென்றும், எல்லோருக்கும் நன்றி கூறிய திரு. ஆனந்தராஜன் தெரிவித்தார்.



## தேவியைத் துதிப்போம்

சக்தியின்றேல் சிவம் இல்லை, சிவம் இன்றேல் சக்தியில்லை என்னும் தத்துவம் படிப்பறிவு இல்லாதவர்களிடமும் பரவலாக நிலவுகிறது. "உனக்குச்சக்தியிருந்தால் அதைச் செய், இல்லாவிட்டால் சிவா என ஓரிடத்தில் இரு'' என்பது நாட்டார் மொழி. நாம் நம்கையினால் காரியங்களைச் செய்தல் போலச் சிவனும் நங்கையினால் [தேவியினால்] எல்லாவற்றையும் செய்கிறார் என்பது திருக்களிற்றுப்படியார் கூறும் சித்தாந்தம் "சிவன் சத்தி தன்னை ஈன்றும் சத்திதான் சிவத்தை ஈன்றும் உவந்திருவரும் புணர்ந்து இங்கு உலகுயிர் எல்லாம் ஈன்றும் பவன் பிரமசாரியாகும் பான்மொழி கன்னியாகும் தவந்தரும் ஞானத்தோர்க்கு இத்தன்மை தான் தெரியுமன்றே'' என்பது சிவ ஞானசித்தியார்.

சிவத்துக்கும் சக்திக்கும் உள்ள உறவு முறை நமக்குப் புலப்படாத சிக்கலாயுள்ளது. அவள் அவனுக்குத் தாயும் மகளும் நல்லதாரமுமாமே என்பர் திருமந்திரஞ்சொன்ன திருமூலநாயனார் எம்பெருமானை இவ்வாண்மாக்கட்குத் தன்னுடைக் கேள்வன், மகன், தகப்பன், தமையன் என்பர் திருவாசகம் அருளிய மாணிக்கவாசகசுவாமிகள் கனகமார்

[6-ம் பக்கம் பார்க்க]

## மக்கள் கருத்து

### வழியோரம் பனைமரம்

யாழ்ப்பாணம் பண்ணை வழியாகக் கடற்பாதையைத் தாண்டியபின் மண்டைதீவு தொடக்கம் ஊர்காவற்றுறை வரையும் சாலை ஓரத்தில் நிரையாக இருமருங்கும் பனம் விதைகளை நாட்டி வளர்த்துவிட்டால், அற்புதமான காட்சியாயும் அழகாயும் பிரயோசனம் உள்ளதாயும் அமையும். இடையிடையே பூவரசு, பொன்னுவரசு நட்டு அழகுபடுத்தலாம். ஆங்காங்கேயுள்ள கிராமாபிவிருத்திச் சங்கங்கள், கிராம சேவை அலுவலர்கள் சிலகாலம் மேற்பார்வை செய்தால் போதுமானது. உறுதியான இடங்களில் பயன்தரும் புளியமரங்களையும் உண்டாக்கலாம்.

இங்ஙனமே பருத்தித்துறை வீதியிலும், சாவகச்சேரி கழிந்தாற்போலுள்ள நெடுஞ்சாலையிலும் நட்டு உண்டாக்கிவிடலாம். இதைப்பற்றி ஊக்கம் எடுக்கவல்ல இளைஞர்கள் தயவு

[6ம் பக்கம் பார்க்க]

### சிறுபாடசாலைகள் பத்திரிகை

[புளியங்குளம்]

நாட்டிலுள்ள சிறிய பாடசாலைகளின் அபிவிருத்தி பற்றிய செய்திப் பத்திரிகை ஒன்றைப் பிரசுரிப்பதற்குரிய நடவடிக்கைகளை கல்விச் சேவைகள் அமைச்சர் திரு. லயனல் ஜெயதிலகா மேற்கொண்டு வருகிறது.

சிறு பாடசாலைகளின் செயற்பாடுகள், பரஸ்பர உறவுகளை மேம்படுத்துதல், செயற்பாடுகளைப் பொதுமக்கள் அறியத்தருதல் ஆகிய நோக்கங்களை உள்ளடக்கியதாக இப்பத்திரிகை விளங்கும்.

# கொலு அலங்காரம்: சர்வதேசக்கவர்ச்சி பெறக்கூடிய ஒன்றே

பா. அனந்தகிருஷ்ணன்

"நவராத்திரி'' என்றழைக்கப்படும் ஒன்பது தினங்களும், இந்து சமுதாயத்தின் கலாசாரங்களையும், அதன் பண்பாட்டினையும், சமயதத்துவங்களுடன் எடுத்து விளக்கும் அரிய தினங்களாக விளங்குகின்றன.

புரட்டாதி மாதப்பகுதிகளில் வரும் இவ்வொன்பது நாட்களும் இந்து மதத்தவர் வாழ்வில், மானிடவாழ்வினுக்குரிய கல்வி, செல்வம், வீரம் என்பன எத்துணை முக்கியம்பெற்று எவ்வாறு அவர்களால் கையாளப்படுகின்றதென்பதனையே ஒவ்வொரு வருடமும், இத்தினங்கள் உணர்த்தி நிற்கின்றதென நவீன சமய அறிஞர்கள் விளக்கமளித்துள்ளனர்.

நவராத்திரி தினங்களை இன்றும் இந்து சமயத்தவருள் பலர் சிறப்பாக தம்நாட்டு இந்துக்கள், முற்றிலும் சமய அனுட்டானங்களுடன் கூடியதாகவே கருதுகின்றனர். இதனால் தினம் கோயிலுக்குச் சென்று வழிபடுவதுபோல், இத்தினங்களிலும் சிறிது விசேஷமாக வழிபடுகின்றனர்.

ஆனால் நவராத்திரி தினங்கள் இந்துக்களது சமூகத்தில் எவ்வளவுதூரம் முக்கியத்துவம் வகிக்கின்றதென்பதனையும், இவை புகட்டி நிற்கும் வாழ்க்கைத்தத்துவங்களையும் நாம் கூர்ந்து கவனித்தால், இது ஒரு சமுதாயத்தின் கலாசாரப் பிரதிபலிப்புக்களையும், மதப் பண்புகளையும், அச்சமுதாயம் ஆண்டுதோறும் புதுப்பிப்பதுடன், இவற்றின் மகிமைகளை மற்றையோருக்கும் அறியப்படுத்துவதற்காக நம்முன்னோரால் ஏற்படுத்தப்பட்ட தினங்களே இவ்வொன்பது தினங்கள் என அறியலாம்.

வீரம், செல்வம், கல்வி. இவை மனிதன் தன் வாழ்வை ஒழுங்குபடுத்தத் தேவைப்படும் முக்கிய துறைகளாகும். இன்று நம்மவருள் சிலர் விளையாட்டு வீரர்களாகவும், சிலர் தனவந்தர்களாகவும், சிலர் கல்விமான்களாகவும் விளங்குகின்றனர். இவ்வாறு ஒவ்வொரு துறைகளிலும் முன்நிற்போரும், இத்துறைகளில் விருப்பு உடையோரும் இந்நவராத்திரி தினங்களை எவ்வளவு தூரம் தமது திறன்களையும் படைப்புகளையும் வெளிக்காட்டப்பயன்படுத்துகின்றார்கள் என்பதிலேயே இத்தினங்களின் சிறப்புக்கள் வெகுவாகத் தங்கியிருக்கின்றன.

### இந்தியாவில்

நவராத்திரி தினங்களில் இந்துக்கள் கணிசமாக வாழும் நாடான இந்தியாவுக்கு நாம் சென்று பார்ப்போமாயின் இத்தினங்கள் இந்துக்களால் எவ்வாறு அனுஷ்டிக்கப்படுகின்றன வென்பதனை நாம் கண்ணூரக்காணலாம்,

இந் நவராத்திரி தினங்கள் வீடுகளிலும்' வியாபார நிலையங்களிலும் பாடசாலைகளிலும் பிரமாதமான கலாரசனையுடன் கூடிய அலங்காரங்களுடன் கொண்டாடப்படும்.

இல்லங்களிலே துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி போன்ற இஷ்ட தெய்வங்களை அலங்கரித்து இவை தமக்கு அளித்த சித்திகளையும் பண்புகளையும் வெளிக்காட்டும் வகையில் "கொலு'' என்று அழைக்கப்படும் அலங்கார முறையினைக் கையாண்டு அழகிய அலங்காரங்களைச் செய்திருப்பார்கள்.

### பொருட்காட்சி போல...

இக்கொலு அலங்காரத்திலே தம் கைத்திறன்களையும், தம் வீட்டாரின் சேகரிப்புகளையும் அழகாகத் தம்க்குரிய ரசனைக்கேற்ப ஒழுங்குபடுத்திவைத்து ஒரு சிறு பொருட்காட்சி போன்றிலே இவ்வொன்பது நாட்களிலும் நடாத்திவிடுகின்றனர்.

இவ்வாறு அமைக்கப்படுகின்ற 'கொலு'' அலங்காரத்தினை நாம் நன்கு அவதானிப்பின் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துறையிலும் உள்ள திறனையும், பற்றினையும் அறியக்கூடியதாக இருப்பதுடன் இவைபற்றி அறிய விரும்புவோரும் அவரவரை அணுகித் தம் சந்தேகங்களை அகற்றக் கூடியதாகவுமிருக்கின்றது.

### கிறிஸ்மஸ் அலங்காரம்

கிறிஸ்தவர்களுடைய பெரும் மதக் கொண்டாட்டமான கிறிஸ்மஸ் பண்டிகையின் போது அவர்களது இல்லங்களிலே கம்பீரமாகக்கொலுவீற்றிருக்கும் சைப்பிரஸ் மரங்கள் எத்துணை அலங்காரம் பெற்றிருக்கு மென்பதனை நாம் நன்கறிவோம்.

இக்காலங்களிலே நாம் கிறிஸ்தவர் இல்லங்களுக்கு விருந்துபசாரங்களுக்காகச் செல்லும் போது அவர்கள் எம்மை அழைத்துச் சென்று தாம் கிறிஸ்மஸ் மரங்களிலே செய்திருக்கும் அலங்காரத்தினையும் தேவதூதன் யேசுவின் சிறப்பினையும், வாழ்க்கைச் சம்பவங்களையும், வெளிக்காட்டும்வகையில் இதில் கையாண்டிருக்கும் யுக்திகளையும் பெருமிதத்துடன் விளக்குவதனைக் கண்டு அனுபவித்துள்ளோம். பல இந்துப்பெற்றோர்கள் தமது கிறிஸ்தவ நண்பர்களது வீடுகளுக்குச் செல்லும்போது அவ்வலங்காரங்களிலே தம்பிள்ளைகள் மயங்கி இருப்பதனையும் காண்கின்றனர்.

சில இந்துக்கள்கூட தமது குழந்தைகளின் விருப்பத்திற்காகவும், தமது ரசனைக்காகவும் தம் வீடுகளிலும் கிறிஸ்மஸ் மர அலங்காரத்தினைச் செய்கின்றனர். இம்முறை எம்மவருள் சிலர் மத்தியிலே, சிறப்பாகக் கொழும்பிலும் ஏனைய வெளியிடங்களிலும் வாழும், சில இந்துக்களிடம் காணக் கூடியதாகவிருக்கின்றது. ஆனால் இவர்கள் இவ்வாறு தம் குழந்தைகளுக்காகவும், தம் ரசனைகளுக்காகவும் செய்யும் இதுபோன்ற அலங்காரத்தினை ஏன்தான் நவராத்திரி தினங்களில் கையாளக் கூச்சப்படுகின்றனரோ புரியவில்லை.

[7-ம் பக்கம் பார்க்க]

**சீ-நோர்: 14 ஆண்டுகள்**

தொடர்கட்டுரை நாளை இதழில் தொடரும்

# இலங்கை வங்கி

# தேசிய அறக்கொடை

## (பருவமடையாதோர், வயதுவந்தோர்) திட்டம்

பெற்ருேர் தங்கள் பிள்ளைகளின் உயர் கல்விக்கோ அல்லது அவர்களுக்கு சீதனமாக வழங்கவோ அல்லது இரண்டிற்குமோ வழிசெய்வதற்கென விசேடமாக உருவாக்கப்பட்டது இத்திட்டம், வயது வந்தவர்களும் தங்கள் எதிர்காலப் பாதுகாப்புக்கு வேண்டிய நிதியை இத்திட்டத்தின்மூலம்பெற்றுக்கொள்ளலாம்.

### வயதெல்லை இடையாது

16 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தேசிய அறக் கொடைக் கணக்குகளை ஆரம்பிக்கலாம். உயர்மட்ட வயதெல்லை இடையாது.

பருவமடையாதவர்களின் பெயர்களில் அவர்களின் பெற்ருேர் அல்லது பாதுகாவலர் கணக்குகளை ஆரம்பிக்கலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கணக்குகளை வைத்திருக்கலாம்,

### அறிமுகம் தேவையில்லை

கணக்கினை ஆரம்பிக்கும் போது அறிமுகஞ்செய்தலோ, சாட்சிகளோ, ஆளடையாள அட்டைகளோ வேண்டியதில்லை. ஆனுல், கணக்கு முதிர்ச்சி அடைந்து பணத்தினைப் பெறும் போது தகுந்த அடையாளமறிந்த பின்னரே பணம் கொடுக்கப்படும்.

### வைப்புச் சான்றிதழ்

தேசிய அறக்கொடைக் கணக்குகளில் வைப்புச் செய்யும் பணத்திற்கான ஒரு வைப்புச் சான்றிதழை கணக்கு வைத்திருப்பவர் ஒவ்வொருவரும் பெறுவார்.

### மாதாந்தக் கட்டுப்பணம்

600 ரூபாவுடன் அல்லது அதன் பெருக்கங்களில் தேசிய அறக்கொடைக் கணக்குகளை ஆரம்பிக்கலாம். இத்தொகையினை 21 தொடர்ச்சியான மாதாந்தத் தவணைகளில் செலுத்தவும் வசதி செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக, 600 ரூபாவை 25 ரூபா கொண்ட 21 மாதாந்தத் தவணைகளில் வைப்புச் செய்யலாம். அப்படிச் செலுத்தும் போது நீங்கள் வைப்புச் செய்யும் மொத்தப் பணம் 525 ரூபாவாகும். மிகுதி 75 ரூபாவும், வைப்பினைச் செய்து முடிப்பதற்கு எடுக்கப்படும் 21 மாதகாலத்தில் சேரும் வட்டி மூலம் நிரப்பப்படும்,

### முதிர்ச்சி

ஒரே முறையில் பணம் முழுவதையும் செலுத்தி ஆரம்பிக்கப்படும் தேசிய அறக்கொடைக் கணக்குகள், அவை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 21 வருடகாலத்தில் முதிர்ச்சியடையும், தவணைமுறை வைப்புத் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்படும் கணக்குகள், 21 வது தவணைப் பணம் செலுத்திய திகதியிலிருந்தே முதிர்ச்சியடையும். (முதிர்ச்சியடைந்த பின்னர் கிடைக்கும் பணம், தவணை முறைத் திட்டம் ஆகியன பற்றிய விபரங்களுக்கு அட்டவணை 1 ஐப் பாருங்கள்),

### முன்கூட்டிய முதிர்ச்சி

தேசிய அறக்கொடைக் கணக்குகளை வைத்திருப்போர் அவர்களின் கணக்குகள் முதிர்ச்சியடையும் காலத்தை எத்தனை ஆண்டுகளாலும் குறைத்துக் கொள்ளலாம். அதற்குரிய தொகைப் பணத்தை அவர்கள் செலுத்தவேண்டும். உதாரணமாக, ரூ. 11,845/25 ஐ ஒரே முறையில் வைப்புச் செய்வதன் மூலம் 600 ரூபா கொண்ட கணக்கின் முதிர்ச்சிக் காலத்தை 15 வருடங்களால் குறைத்துக் கொள்ளலாம். இதனுல் கணக்கு வைத்திருப்பவர் 6 வருடங்களில் முதிர்ச்சிக்கால நன்மைகளை அனுபவிப்பார்.

(விபரங்களுக்கு அட்டவணை 2 ஐப் பாருங்கள்)

### மீளப் பெறுதல்

வயது வந்தவர்கள், விரும்பினுல், கணக்கு ஆரம்பித்த திகதியிலிருந்து 2 வருடங்களின் பின்னர் விரும்பிய நேரத்தில் திட்டத்திலிருந்து விலகிக் கொள்ளலாம். அவர்கள் வைப்புச் செய்த தொகையையும் அத்துடன் சேர்ந்த வட்டிப்பணத்தையும் மீளப்பெறலாம்.

### ஓய்வூதியக் கணக்குகள்

பருவமடையாதோர், அவர்களின் 16 வது 17 வது பிறந்த திகதிகளுக்கிடையிலான அந்த ஒருவருடகாலம் பகுதியில் தங்கள் தேசிய அறக்கொடைக் கணக்குகளை இலங்கை வங்கியின் தேசிய ஓய்வூதியக் கணக்குகளாக மாற்றலாம். 17வது பிறந்த திகதிக்குப் பின்னர் இதனைச் செய்ய முடியாது.

### மேலதிகக் கொடுப்பனவு

வைப்புச் செய்பவர் ஒருவர், முதிர்ச்சியடைந்த பின்னர் அப் பணத்தை வங்கியில் விட்டுவைப்பதன் மூலம் கவர்ச்சியான ஒரு மேலதிகத் தொகை பணத்தை மாதாந்தம் பெறமுடியும். முதிர்ச்சியடைந்த அத்தொகை பணத்தை அவர் மீளப்பெறும் வரை, இந்த மாதாந்த மேலதிகக் கொடுப்பனவு நீடிக்கும். இது முதிர்ச்சிக்காலப் பணத் தொகையை எந்த விதத்திலும் பாதிக்காது. அவர் விரும்பிய நேரத்தில், எந்த விதக் கழிவுமின்றி முழுமையாக மீளப்பெறலாம்.

(மாதாந்த மேலதிகக் கொடுப்பனவு பற்றிய விபரங்களுக்கு அட்டவணை 1 ஐப் பாருங்கள்),

### மாதாந்த வருமானம்

இந்த ஏற்பாடு, ஓய்வுபெறும் காலத்தை நெருங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு அவர்கள் தொழில் புரியாமல் இருக்கும் காலத்தில் கிரமமான மாதாந்த வருமானத்தை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. அவர்கள் தங்கள் இளைப்பாறல் மூலம் பணிக் கொடையாகப் பெறும் பணத்தை வைப்புச் செய்து, கணக்குகள் முன்கூட்டியே முதிர்ச்சியடைவதற்குச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பயன்படுத்தி கிரம மாதாந்த வருமானத்தைப் பெற வழிசெய்யலாம்.

### வட்டி வீதங்கள்

கொடுப்பனவுகள் வட்டி வீத மாற்றங்களுக்கமைய மாறுபடும்.

### அட்டவணை 2

ஒரு600ரூபா தேசிய அறக்கொடைக் கணக்கு முன்கூட்டியே முதிர்ச்சியடையவதற்குச் செலுத்தவேண்டிய தொகைப் பணம்.

| முதிர்ச்சி வருடங்களில் | தொகை |
|---|---|
| 20 | ரூ. 732-00 |
| 19 | ரூ. 893-00 |
| 18 | ரூ. 1,089-50 |
| 17 | ரூ. 1,329-00 |
| 16 | ரூ. 1,621-50 |
| 15 | ரூ. 1,978-25 |
| 14 | ரூ. 2,413-50 |
| 13 | ரூ. 2,944-50 |
| 12 | ரூ. 3,592-25 |
| 11 | ரூ. 4,382-75 |
| 10 | ரூ. 5,346-75 |
| 9 | ரூ. 6,523-25 |
| 8 | ரூ. 7,958-25 |
| 7 | ரூ. 9,709-25 |
| 6 | ரூ. 11,845-25 |
| 5 | ரூ. 14,451-25 |
| 4 | ரூ. 17,630-50 |
| 3 | ரூ. 21,509-25 |
| 2 | ரூ. 26,241-25 |
| 1 | ரூ. 32,014-50 |

### அட்டவணை 1

வைப்புத்தொகைகளும் முதிர்ச்சியடையும்போது கிடைக்கும் தொகைகளும்

| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஒரே முறையில் செலுத்துதல் | 600 | 1,200 | 2,400 | 4,800 | 9,600 | 12,000 | 15,600 | 18,000 |
| அல்லது 21 மாதாந்தத் தவணைகள் | 25 (525) | 50 (1,050) | 100 (2,100) | 200 (4,200) | 400 (8,400) | 500 (10,500) | 650 (13,650) | 750 (15,750) |
| 21 வருடமுடிவில் கிடைக்கும் தொகை | 39,057 | 78,115 | 1,56,231 | 3,12,462 | 6,24,924 | 7,81,155 | 10,15,501 | 11,71,732 |
| மாதாந்தம் கிடைக்கும் மேலதிகத் தொகை | 600 | 1,200 | 2,400 | 4,800 | 9,600 | 12,000 | 15,600 | 18,000 |

## துன்னாலை இராசகோபால் கொலை வழக்கு:

# "மரணத்தில் சந்தேகமிருந்ததால் நான் அதிகாரிகளுக்கு அறிவித்தேன்"

### கான்ஸ்டபிள் சாட்சியம்

[நமது புலோலி நிருபர்]

"சம்பவதினம் துன்னாலைப் பாடசாலைக்குச் சென்றபோது ஒருவர் தலை கீழே நோக்கியபடியும், கால் பெருவிரல்கள் நிலத்தில் உராஞ்சப் பட்டபடியும், இரத்தம் நிலத்தில் பாய்ந்திருக்க தொங்கிக்கொண்டிருந்தார். அவரது மரணத்தில் சந்தேகமிருந்தபடியால் நான் திடீர் மரண விசாரணை அதிகாரிக்கும், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் தொங்கிக்கொண்டிருப்பவரின் மரணத்தில் சந்தேகமிருப்பதைத் தெரிவித்தேன்."

இவ்வாறு துன்னாலை வாலிபர் இராசகோபால் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த பருத்தித்துறைப் பொலிஸ் கான்ஸ்டபிள் துவான் சுரேஸ் அர்பின் குறிப்பிட்டார்.

இக்கொலை வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. அவர் தொடர்ந்து கூறியதாவது:-

"19-5-1981 அன்று நான் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றினேன் அன்றையதினம் கொலைச் சம்பவம் தொடர்பான ஒருவித முறைப்பாடும் எனக்குக் கிடைக்கவில்லை. பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துன்னாலை வெலிக்கந் தோட்டத்திற்கு சடுதி மரணம் சம்பந்தமாக விசாரணை செய்யும்பொருட்டு என்னைப் போகுமாறு பணித்தார். அதற்கிணங்க வெலிக்கந்தோட்டத்திற்கு நான் சென்று விசாரணை நடத்தினேன்.

இந்த எதிரிகளை எனக்குத் தெரியாதபடியால் இவர்கள் அந்த நேரம் அவ்விடத்தில் நின்றார்களா என்பது எனக்குத் தெரியாது. நான் அவ்விடத்திற்குப் போனதும் எனது அவதானங்களைக் குறித்துக்கொண்டேன். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு வேலுப்பிள்ளையும் அங்கு நின்றார். மாவட்ட வைத்திய திகாரி டாக்டர் மயிலேறும்பெருமாளும் நானும் தொங்கிக்கொண்டிருந்த சடலத்தைக் கீழே இறக்கினோம். நான் பிரேத பரிசோதனை நடந்த இடத்தில் வைத்தே அவ்வுடுப்புகளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்தேன்."

## இராசகோபால் கொலை வழக்கு

# "மாட்டுக்காசுவாங்கத்தான் ஆறுமுகம் வந்தார்"

"மாட்டுக்காசு வாங்குவதற்காகவே ஆறுமுகம் வற்றுப்பளை பொங்கல் அன்றிரவு எங்கள் வீட்டுக்கு வந்தார்" என்று கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு [வயது 50] என்பவர் சாட்சியமளிக்கையில் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இவ்வழக்கில் ஏற்கனவே சாட்சியமளித்த ஆறுமுகம் செல்லையா என்பவரை எனக்கு 20 வருடங்களாகத் தெரியும். அவரும் நானும் கமத்தொழில் தான் செய்துவருகின்றோம். நான் ஆறுமுகத்தின் வீட்டிற்குப் போயிருக்கிறேன். அவரும் எனது வீட்டிற்கு வந்திருக்கிறார்.

"ஆறுமுகத்திற்கும் எனக்கும் மாடுவாங்கிய கொடுக்கல் வாங்கல் இருந்தது. இந்த வருடம் சித்திரை மாதம் ஆறுமுகத்திடம் 900 ரூபா விலைக்கு மாடு ஒன்றை வாங்கினேன். மாடு வாங்கிய தினமே 600 ரூபா காசைக் கொடுத்துவிட்டேன். 300 ரூபாவை வற்றுப்பளைப் பொங்கலுக்கு மறு நாள் கொண்டுபோய்க் கொடுத்து விட்டேன். ஆறுமுகத்தின் மனைவியிடமே காசைக் கொடுத்தேன்.

திருநாவுக்கரசு பெண் தனபதி (வயது 45) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:- ஆறுமுகத்தை எனக்குத் தெரியும். அவர் 18-5-81 அன்று இரவு மாட்டுக்காசு வாங்குவதற்காக எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். அவர் வந்தபோது வீட்டில் எனது கணவர் இருக்கவில்லை. எனது கணவர் அவ்வேளை தென்னமட்டை விறகு ஏற்றப் போய்விட்டார். பின்பு இரவு அவர் வீட்டிற்குத் திரும்பியிருந்தார். ஆனால் என்ன நேரம் அவர் வீட்டிற்குத் திரும்பியிருந்தார் என்பதை என்னால் சொல்லமுடியாது. அவர் திரும்பிவந்தபோது நிலவு இருந்தது.

"ஆறுமுகம் எனது கணவரைக் கொண்டுதான் போக வேண்டுமெனக்கூறி அவர் வரும்வரை காத்திருந்தார்".

மற்றும் சார்ஜன்ட் சின்னப்பு வடிவேலு, கிராமசேவை அலுவலர் பீ நடராசா, சுப்பிரமணியம், தங்கவடிவேல் ஆகியோரும் சாட்சியமளித்தனர். [அ]

## யானைக்குட்டி ரயிலுக்குப் பலி

[புளியங்குளம்]

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு சென்ற தபால் ரயில் மாங்குளத்திற்கும் முறிகண்டிக்கும் இடையில் யானைக்குட்டி ஒன்றை மோதியதையடுத்து அக்குட்டி ஸ்தலத்திலேயே மரணமானது. ரயில் சாரதி இது குறித்து மாங்குளம் ரயில் நிலைய அதிபருக்கு அறிவித்ததை அடுத்து மாங்குளம் பொலிசார் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் ஒஸ்டின் ஜயவர்த்தனாவின் அனுமதியுடன் அக்குட்டி யானையின் சடலத்தைத் தகனம் செய்தனர். [இ]

## தேவியைத்

3-ம் பக்கத் தொடர்ச்சி

கவின்செய் மன்றில் அனகநாடகற்கு எம்மன்னை மனைவி, தாய், தங்கை, மகள் என்பர் குமர குருபர சுவாமிகள்.

அப்பனையும் அம்மையையும் பழம் பெருமை வாய்ந்த எகிப்தியர் ஒசைறிஸ், ஐசிஸ் என்றனர். பபிலோனியர் ஏ, தங்கியா என்றனர். சால்டியர் (பழைய சோழர்?) சமஸ், இத்தர் என்றனர். அவர்கள் எல்லோரும் அன்னையை அன்பு அருள், பரிவு, இரக்கம், தாய்மை, மென்மை, தியாகம் உள்ளவராகவே கண்டனர் சக்தி உலகுயிர்களுக்குத் தாய்.

இளங்கோவடிகள் சைவப் பெற்றோரின்பிள்ளை. சைவராகவே வாழ்ந்து துறவு பூண்டு சமணசமயத்தையும் நன்கறிந்தவர். விருப்பு வெறுப்பின்றி உள்ளதை உள்ளபடியே பாடியவர். அவர்கண்ட சக்தியை அமரி, குமரி, கவுரி, சமரி, சூலி, நீலி, ஐயை, செய்யவள், வெய்யாள், கலைப்பாவை, பாய்கலைப்பாவை, ஆய்கலைப் பாவை. அருங்கலைப்பாவை என்பர். இன்னும் இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு என்றும் தாருகன் பேருரம் கிழித்த பெண் என்றும் அவள் பெருமையைப் பாடுவர்.

—க. சி. குலரத்தினம்

[யாழ்ப்பாணம்]

தொண்டமனாறு தச்சன் கொல்லை சித்திவிநாயகர் ஆலய உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி இம்மாதம் 13-ம் தேதி வரை தொடர்ந்து நடைபெறும்.

## இப்படியும் நடக்கிறது

நிதி நெருக்கடி காரணமாக சில பல்கலைக்கழகங்களை மூட வேண்டிய சூழ் நிலை ஏற்படுமா?

ஒரு பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த உயர்குழு, உரிய அதிகாரிகளை அண்மையில் சந்தித்து அடுத்த ஆண்டுக்கென தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாது என்றும், நிதிநிலைமை சீராக்கப்படாவிட்டால் மூடுவிழா நடத்த வேண்டிவரும் என்றும் கவலை தெரிவித்தது.

இதற்கு என்னபதில் கிடைத்தது தெரியுமா?

"நாடு எதிர்நோக்கும் நிதி நெருக்கடியால், உங்கள் பல்கலைக்கழகம் என்ன; எல்லாப் பல்கலைக்கழகங்களையும் மூடவேண்டி வந்தாலும் வரும்" என்றார்களாம்!

—ஊடுருவி

## கூட்டணி இன்று...

[1ம் பக்கத் தொடர்ச்சி)

புக்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. இதன் நிமித்தமாக ஊர்காவல் படைகள் அமைப்பது தொடர்பாகவும் யாழ் வன்செயல்கள் தொடர்பான நஷ்டஈடு தொடர்பாகவும் ஆராய குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன அரசு இவற்றை ஏற்றுக்கொண்டுள்ளதால் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு பாராளுமன்றத்துக்குச் செல்லலாம்என சிலர் அபிப்பிராயம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதே வேளை அனைத்தும் சொல்லளவில்தான் இருக்கிறது செயலில் எதனையும் காணோம். கோரிக்கைகள்மீது நடவடிக்கைகளை மேற்கொண்டால்தான் பாராளுமன்றம் செல்வது பற்றி யோசிக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்

யாழ் சம்பவத்தில் ஈடுபட்ட பொலிசார் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படாததையும், 75 சதவீத தமிழ் தெரிந்த பொலிசாரை தமிழ்ப்பிரதேசங்களில் நியமிக்க நடவடிக்கை எடுக்காததையும் இவர்கள் உதாரணமாகக் கூறுகிறார்கள் சன்சோனி கமிஷன் விசாரணையும் நடந்ததுதானே என்றும் இவர்கள் கூறுகிறார்கள் ஆக பாராளுமன்ற பகிஷ்கரிப்புபற்றி 'கயிறிழுப்பு' பலமாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச கமிஷன் தவிர்ந்த 4 கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டால் பகிஷ்கரிப்பை கைவிடலாம் என்பது பொதுவான கருத்தாகும்

அத்துடன் மகாராணி வருகைக்காகவும், ஜனாதிபதி தேர்தலுக்காகவுமே அரசு இச்சமரசப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கலாமென்றும், எனவே இதில் விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் சிலர் கருத்துக் கொண்டிருக்கிறார்கள் இதேவேளை மகாராணியின் வரவேற்பில் கூட்டணியின் நிலை என்ன என்பதும் முக்கிய வினாவாகும் ம-இ

## வழியோரம்..

[3ம் பக்கத் தொடர்ச்சி]

செய்து சங்கங்கள், மன்றங்கள் மூலம் கலந்துரையாடிய பின் மில்க்வைற் தொழிலதிபருடன் தொடர்புகொள்ளுங்கள். முன்னர் யாரோ நல்லவர்கள் சாவகச்சேரியிலிருந்து மீசாலைவரை கறிமுருங்கை நாட்டி வளர்த்தமை பாராட்டற்பாலது.

க. கனகராசா
(சமாதான நீதவான்)
மில்க்வைற் தொழிலகம்,
யாழ்ப்பாணம்.

## சாவகச்சேரி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யோகமோகம்கொண்டு சென்றதனாலேயே இவ்விபரீதம் ஏற்பட்டது என்றும் ஆங்கில அறிவில்லாத இளைஞர், யுவதிகள் வெளிநாட்டு உத்தியோக மோகத்தைக்கைவிடவேண்டும் என்றும் மரணவிசாரணை அதிகாரி திரு. தர்மேந்திரன் தெரிவித்தார். இ


## வெளிநாடுகளில் தொழில்கள்

பெறுவதற்கு ஏற்ற தொழில் நுட்பப் பயிற்சிகள்-வெல்டிங் (Arc & Gas), வயறிங் (I. E. E. முறைப்படி), RADIO OFFICERS (P. M. G) முதலியன.

NATIONAL INSTITUTE OF ENGINEERING TECHNOLOGY

57, 59 பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா ஆழ்வாப்பிள்ளை

திருமதி செல்லம்மா ஆழ்வாப்பிள்ளை காலமானார் இவர் ஆழ்வாப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற இ.போ.ச களஞ்சியப் பொறுப்பாளர், மட்டக்களப்பு) அன்பு மனைவியும், விக்னேஸ்வரன் (சுவிஸ் விமானசேவை), தெய்வேந்திரன் [சாஜா], திருஞானம் (பனம் விமான சேவை) ஆகியோரின் தாயாரும் திருமதி விக்னேஸ்வரன், திருமதி தெய்வேந்திரன், திருமதி சகுந்தலா ராணி திருஞானம் (ஏயர் லங்கா) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற டாக்டர் இராஜசிங்கம் (பிராந்திய பணிப்பாளர், உலக சுகாதார நிறுவனம்], இரத்தினசிங்கம் (ஓய்வு பெற்ற கணக்காளர், காணி அபிவிருத்தி), நவரத்தினம் (ஓய்வு பெற்ற உதவி ஆணையாளர், தொழில் திணைக்களம்), காலஞ்சென்ற நடராசா (அதிபர் செங்குந்தா இந்துக்கல்லூரி), இராஜேந்திரன் (சுகாதாரசேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம்), பாலசிங்கம் (ஆசிரியர் ஹாட்லிக்கல்லூரி) திருமதி இராசம்மா சுப்பிரமணியம், தங்கம்மா, சேனாதிராசா, மகேஸ்வரி நடராஜா ஆகியோரின் சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (4-10-81) ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணிக்கு கந்தஉடையார் வளவு, புலோலி மேற்கு, பருத்தித்துறையில் நடைபெறும். 1146


# பணம்? பணம்?? பணம்???

நீங்கள் இறக்குமதி செய்துள்ள பொருட்கள் தேங்கி நிற்கின்றனவா?
உங்களுக்கு வியாபாரத்திற்கு பணம் தேவையா?
உங்கள் குறைகளை தீர்க்க நாங்களிருக்கின்றோம்
வந்து சந்திக்கவும்

விற்பனை முகாமையாளர்,

TFC

## தமிழ்ஸ் ஸ்கம்பனி லிமிட்டெட்,

249 சி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 7680


இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 808ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper The General Post offlce: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126: